**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 102** **நாள்: 16.05.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள்,**

**10 மற்றும் 11ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற சென்னை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை பள்ளி கல்வி வளர்ச்சி நிதிக்காக இன்று வழங்கினார்.**

இன்று (16.05.2025) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி வழங்கிய 14 சென்னை பள்ளிகளுக்கும், 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி வழங்கிய லாய்ட்ஸ் சாலை-சென்னை மேல்நிலைப்பள்ளிக்கும் பள்ளி கல்வி வளர்ச்சி நிதிக்காக தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம் வழங்கினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னை பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் திறன், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன், பள்ளியின் உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்டவை சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு பொதுத் தேர்வில் 100 % தேர்ச்சி வழங்கிய சென்னை பள்ளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பள்ளி கல்வி வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2024-25ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் புரசை, ஜி. கோயில் தெரு-சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காமராஜபுரம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, கொடுங்கையூர், காமராஜர் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, கண்ணம்மாபேட்டை-சென்னை உயர்நிலைப்பள்ளி, பாடிக்குப்பம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, லாய்ட்ஸ் சாலை-சென்னை மேல்நிலைப்பள்ளி, குக்ஸ் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, கீழ்ப்பாக்கம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, கே.பி.தெரு-சென்னை உயர்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, மெக்னிக்கோலஸ் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, ரங்கராஜபுரம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, வி.பி.கோயில் தெரு-சென்னை உயர்நிலைப்பள்ளி, சூளைமேடு-சென்னை மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 14 சென்னை பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று, பள்ளியின் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும், 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் லாய்ட்ஸ் சாலை-சென்னை மேல்நிலைப்பள்ளி 100% தேர்ச்சி பெற்று, பள்ளியின் தலைமையாசிரியருக்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு. மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் திரு.த.விசுவாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**